படுகிறது. அந்த ஜீப்புகளை பஞ்சாயத்து யூனியன்களிடம் கொடுத்து விட்டு, அரசாங்கத்திற்குத் தேவையானால் புதிதாக வாங்கிக் கொள்ள முன்வருவார்களா?

கனம் திரு. கோ. பூவராகன் : தேசிய நெருக்கடியில் அவரவர்கள் செய்ய வேண்டிய உதவியில் பஞ்சாயத்து யூனியன்களும் பங்கு கொள்ள வேண்டும்.

திரு. எம். எஸ். மணி : சில பஞ்சாயத்து யூனியன்களில் பெட்ரோலுக்கு மொத்தமாக பங்கில் இருந்து கூப்பன் வாங்கி வைத்துக் கொண்டு சில நேரங்களில் சொந்தக் கார்களுக்குப் பயன்படுத்துகிற நிலைமை அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. கோ. பூவராகன் : இதுபோன்ற புகார் அரசாங்கத்திடம் இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : பஞ்சாயத்து யூனியன்களிடமுள்ள ஜீப்புகளை எடுத்துக் கொண்டு அவர்களுக்கு மாட்டு வண்டி கொடுக்கும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது?

கனம் திரு. கோ. பூவராகன் : அவ்வாறு கோரிக்கை வந்தால் கவனிக்கப்படும்.

திரு. செ. மாதவன் : பஞ்சாயத்து யூனியன்களுக்கு கமிஷனர்கள் பொறுப்பாக இருந்து நடத்துகிறார்கள். நிர்வாக காரியங்களை அதிகாரிகள் பார்த்துக் கொள்கிறார்கள். இந்த ஜீப் சம்பந்தமான கண்காணிப்புப் பொறுப்பை மன்றத்திடம் ஒப்படைப்பதில் என்ன தவறு இருக்கிறது?

கனம் திரு. கோ. பூவராகன் : மன்ற உறுப்பினர்கள் அபிவிருத்தித் திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டும். இதைப் பற்றி தவறு நடக்காமல் மேல் அதிகாரிகள் பார்வையிட்டுக் கொள்வார்கள்.

திரு. எம். எஸ். மணி : பட்ஜெட் கூட்டத்தில் முதல் அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாட்டு வண்டி கொடுக்கலாம் என்றார்களே, அந்தத் திட்டம் எப்போது அமுலுக்குக் கொண்டுவரப்படும்?

கனம் திரு. கோ. பூவராகன் : பஞ்சாயத்து யூனியன்களிடம் இருந்து அத்தகைய கோரிக்கை வந்தால் அதைப் பரிசீலனை செய்து முடிவு எடுக்கலாம். (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கூட்டு வண்டியா, மொட்டை வண்டியா?) சிரிப்பு.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO POWER CUT AND ITS IMPACTON INDUSTRIES.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் சபாநாயகர் அவர்களே, "நமது அரசாங்கம் அண்மையில் இம்மாநிலத்தில் கொண்டு வந்த மின்சார வெட்டு காரணமாக தேசீய நெருக்கடி நிலைமை நிலவும்

8th November 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

தற்சமயம் தொழில் நிறுவனங்களின் தொழில் வளர்ச்சி பெருமளவு பாதிக்கப்பட்டிருப்பதையும் அதன் விளைவாக ஏராளமான பேர் வேலையிழக்கக் கூடிய நிலைமை இருப்பதையும் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை" கனம் தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I wish to make the following statement :—

The power shortage and consequent cut in supply is due to the utter failure of the South-West Monsoon this year and consequent poor hydel storages. The deficit in rainfall has occurred mainly in the catchment areas. The Nilgiris District which is the principal hydro-electric generation area had received only 690 m.m. of rainfal during the South West Monsoon period against the normal 1,160 m.m. It had a deficit of 35 per cent. Coimbatore had a deficit of 47.3 per cent. In Madurai and Papanasam Hills too the rainfall was poor. Consequently as against an inflow equivalent of 1,990 million units recorded in the period July-September 1964, for the corresponding period this year the inflow equivalent has been only 887 million units. This has caused the unprecedented scarcity both for irrigation and for power generation. The hydel storages had, in the middle of October, only about 15 per cent of the full reservoir capacity.

With the present storage and the anticipated inflows for the coming months it will not be possible to meet the requirements for the long period ahead till the onset of the next South West Monsoon. The North-East Monsoon has set in somewhat in time. It can however contribute only to the storages in Periyar and Papanasam and to a much lesser extent in Avalanche and Emerald and help reduce agricultural load. But it is yet to make any significant impact. It is hence necessary that the consumption of power is planned even from now on a realistic and even on an austere basis. The Government hope to secure some power from the neighbouring State of Mysore, which has better hydel storage than Madras, at a reasonable price and this is under negotiation. But even with this relief, the grid demand cannot be met in full. The available storage equivalent in the middle of last month in the hydel reservoirs was only 290 million units. The storage equivalent of the anticipated inflows from the North-East Monsoon was 425 million units. The average grid demand was 120 lakhs per day. Hence the available hydel generation could last only for a period of about 3 months from the middle of October 1965. The Government have therefore been reluctantly obliged to introduce a power cut with effect from 1st November 1965.

According to the orders issued by Government the cut in the case of High Tension industrial consumers is 25 per cent of the energy consumed in September 1965 or the average of the three months' consumption during the period July, August and September 1965, whichever is higher. The cut in Madras Thermal area

is 20 per cent. The cut in the case of low tension supply is 25 per cent both in hydel and thermal areas. It is open to the Industries to programme the utilisation of the electrical energy in any month without exceeding the quota fixed by suitable adjustment and declaring additional holidays preferably by working 5 days a week or less. Industries having their own generators can use them to meet their requirements in full and the power so produced would be exempt from Consumption Tax.

The Government are aware that the power cut will affect production. But such adverse effect has been kept to the minimum as the cut is inevitable. The position will be reviewed from time to time and the cut will not be continued an hour longer than required.

Government have also appreciated the need for a long-range remedy by stepping up the Thermal component in the Grid. The Ennore Thermal Plant with 300 m.w. and the Atomic power station with 400 m.w. will be implemented in the Fourth Plan period. We are also pressing for the sanction of the Tuticorin Power Project.

III.—DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN 1962–63—PRESENTATION.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, *1962-63*-ம் ஆண்டின் மிகைச் செலவுகளுக்கான (excess expenditure) மானியத் தேவைகளின் விவர அறிக்கையை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். இவற்றுள், சில மானியங்களின் செலவினங்கள் அந்த ஆண்டுக்கென இறுதியாக அனுமதிக்கப்பட்ட தொகைகளின் அளவுக்குமேல் செலவழிக்கப்பட்டிருப்பதாகக் காணப்பட்டுள்ளன. அச் செலவினங்களையும் இந்த விவர அறிக்கையில் காணலாம்.

1964-65-ம் ஆண்டின் பொதுக் கணக்குக் குழுவினர் இந்த மிகைச் செலவினங்களைப் பரிசீலனை செய்து, தமிழ்நாடு அரசாங்கத்தின் *1962-63*-ம் ஆண்டுக் கணக்குகள் மீதான தங்கள் அறிக்கையின் 27-வது பாராவில், அந்த அறிக்கையின் 7-ம் இணைப்பில் கண்டுள்ள மிகைச் செலவு மானியத் தேவைகளை சட்டப் பேரவையின் இசைவிற்காக அதன்முன் வைக்க வேண்டுமெனப் பரிந்துரை செய்துள்ளனர். மேலும், அக் குழுவினர் தங்கள் அறிக்கையின் 26-வது பாராவில், "மானியம் 27. பொதுப் பணிகள்—பணிகள்" என்கிற தலைப்பிற்குச் சம்பந்தப்பட்ட செலவினம் ஒன்று தவறான தலைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருப்பதால் அதைத் திருத்துவதற்காக, அரசாங்கத்தின் பல்வேறு துறைக் கணக்குகளை மாநிலக் கணக்காயரின் (Accountant-General) கணக்குகளோடு அவ்வப்போது வைத்துச் சரிபார்க்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளனர். மேற்சொன்ன இச் செலவினத்தை உரிய தலைப்பின் கீழ் வகைப்படுத்தும் பணி இப்போது நிறைவேற்றியுள்ளது. அதன் காரணமாக இந்த மானியத்தின் கீழ், மேலும்